December 31, 2025 – தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. வங்கதேச முன்னாள் பிரதமரும், வங்கதேச தேசியவாத (பிஎன்பி) கட்சியின் தலைவருமான கலீதா ஜியா செவ்வாய்க்கி ழமை (டிச. 30) காலமானார். 80 வயதான இவர், வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமர் என்ற பெருமைக்குரியவர்; மூன்றுமுறை பிரதமர் பதவி வகித்தவர்.

(i) வங்கதேசத்தின் முதல் பெண் பிரதமர், முஸ்லிம்களில் பிரதமரான இரண்டாவது பெண் என்ற பெருமையுடன் அப்பதவிக்கு வந்தார் கலீதா (முதல் முஸ்லிம் பெண் பிரதமர் பெநசீர் பூட்டோ-பாகிஸ்தான்).

2. ஐக்கிய அமீர ஆதரவுடன் செயல்பட்டுவரும் யேமன் பிரிவினைவாதப் படையினரைக் குறிவைத்து அந்த நாட்டின் முகல்லா துறைமுக நகரில் சவூதி அரேபியா வான்வழித் தாக்குதல் நடத்தியது.இது குறித்து சவூதி அரேபிய வெளியுறவு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

(i) ஐக்கிய அரபு அமீரகத்தின் ஃபுஜைரா துறைமுகத்தில் இருந்து வந்த கப்பல்கள் மூலம் தெற்கு இடைக்கால கவுன்சில் (எஸ்டிசி) பிரிவினைவாதப் படைகளுக்கு ஆயுதங்கள் மற்றும் ராணுவ வாகனங்கள் அனுப்பப்பட்டன.

(ii) இந்த ஆயுதங்கள் யேமனின் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மைக்கு உடனடி அச்சுறுத்தல் ஏற்படுத்துவதால், காலை நேரத்தில் வான்வழித் தாக்குதல் நடத்தப்பட்டது. கப்பல்களில் இருந்து இறக்கப்பட்ட ஆயுதங்கள் மற்றும் வாகனங்களை இலக்காகக் கொண்டு இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(iii) இதற்கிடையே, யேமன் பிரிவினைவாதிகளுக்கு ஆதரவாக ஐக்கிய அரபு அமீரகம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் மிகவும் ஆபத்தானவை என்று சவூதி அரேபியா முதல்முறையாக நேரடியாகக் குற்றஞ்சாட்டியது.

(iv) யேமனில் தலைநகர் சனா உள்ளிட்ட கணிசமான பகுதிகளை ஈரான் ஆதரவு பெற்ற ஹூதி பழங்குடியின படையினர் கடந்த 2014-ஆம் ஆண்டு கைப்பற்றினர். ஐ.நா. அங்கீகாரம் பெற்ற அரசுக்கு ஆதரவான படையினர் நாட்டின் தெற்குப் பகுதியை மட்டும் கட்டுப்படுத் திவருகின்றனர்.

(v) இந்த உள்நாட்டுப் போரில் ஹூதி படையினருக்கு எதிராக சவூதி அரேபியா வான்வழித் தாக்குதல் நடத்திவந்தது. ஹூதிக்களுக்கு எதிராக எஸ்டிசி, தேசிய கவசப் படைகள் உள்ளிட்டவை ஒன்றிணைந்து போரிட்டன.

(vi) இதில் எஸ்டிசி-க்கு ஐக்கிய அரபு அமீரகம் ஆதரவு அளித்து வருகிறது. சவூதி அரேபியாவோ தேசிய கவசப் படைகள் உள்ளிட்ட பிற ஆயுதக் குழுக்களை

ஆதரிக்கிறது.

(vii) இந்தச் சூழலில், தெற்கே அண்மைக் காலமாக முன்னேறிவந்த எஸ்டிசி படையினர் அரசுப் படையினரின் கட்டுப்பாட்டில் இருந்த ஹத்ரமவுத், மஹ்ரா மாகாணங்களை கைப்பற்றினர்.இதனால் சவூதி அரேபியாவுக்கும், ஐக்கிய அரபு அமீர கத்துக்கும் இடையே பதற்றம் ஏற்பட்டுள்ளது.

3.2026-ஆம் ஆண்டுக்கான ஐ.நா. பொதுச் செயலர் அன்டோனியோ குட்டெரெஸின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தி, முதல்முறையாக ஆங்கிலம் போன்ற அதிகாரபூர்வ மொழிகளுடன் ஹிந்தி, உருது உள்ளிட்ட 11 மொழிகளில் வெளியிடப்பட்டுள்ளது.

(i) உலக நாடுகள் போர் மற்றும் அழிவுகளுக்குச் செலவிடுவதைக் குறைத்து, மக்கள் வளர்ச்சித் திட்டங்களில் முதலீடு செய்ய வேண்டும் என்று அன்டோனியோ குட்டெரெஸ் தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

(ii) ஹிந்திக்கு முக்கியத்துவம்: ஐ.நா. பொதுச் செயலரின் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில், ஆங்கிலம், அரபி, சீனம்,பிரெஞ்சு, ரஷியன், ஸ்பானிஷ் ஆகிய 6 அதிகாரபூர்வ மொழிகளுடன் தற்போது ஹிந்திக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டுள்ளது.

(iii) இந்திய அரசும், ஐ.நா. தகவல் தொடர்புத் துறையும் கடந்த 2018-இல் மேற்கொண்ட ஏற்பட்ட ஒப்பந்தத்தின்படி செயல் படுத்தப்பட்டு வரும் 'ஐ.நா.வில் ஹிந்தி திட்டத்தின்கீழ் இது சாத்தியமாகியுள்ளது. இத்திட்டத்துக்காக இந்திய அரசு ஆண்டு தோறும் 15 லட்சம் டாலர் நிதி வழங்குகிறது. அண்மையில் இத்திட்டம் 2030-ஆம் ஆண்டு வரை நீட்டிக்கப்பட்டது. பன் மொழித்தன்மையை ஊக்குவிக்க இந்தியா எடுத்துவரும் முயற்சிகளுக்குக் கிடைத்த பெரிய வெற்றியாகவும், இந்திய மொழிக்கு உலக அளவில் கிடைத்துள்ள கௌரவமாகவும் இது பார்க்கப்படுகிறது.

(iv) இதேபோல், இந்தியாவின் 22 அதிகாரபூர்வ மொழிகளில் ஒன்றாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உருது மொழியிலும் வாழ்த்துச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது. குறிப்பாக, வட இந்தியா மற்றும் ஹைதராபாத் போன்ற பகுதிகளில் உள்ள முஸ்லிம்களி டையே இந்த மொழி மிகவும் பரவலாகப் பேசப்படுகிறது. பாகிஸ்தானின் அதிகாரபூர்வ மற்றும் தேசிய மொழியாகவும் உருது திகழ்கிறது.

4. இந்திய விளையாட்டுத் துறையில் அமைப்பு மற்றும் நிர்வாக ரீதியிலான குறைபாடுகள் இருப்பதாக, மத்திய விளையாட்டு அமைச்சகத்தால் அமைக்கப்பட்ட சிறப்புப் பணிக் குழு அறிக்கை அளித்துள்ளது.

(i) விளையாட்டுத் துறையில் இருக்கும் பிரச்னைகள் தொடர்பாக ஆராய, 9 நபர் சிறப்பு பணிக் குழு ஒன்றை மத்திய விளையாட்டு அமைச்சகம் கடந்த ஆகஸ்ட் மாதம்

அமைத்தது.

(ii) இந்திய முன்னாள் துப்பாக்கி சுடுதல் வீரரும், ஒலிம்பிக் பதக்கம் வென்றவருமான அபினவ் பிந்த்ரா தலைமையிலான இந்தக் குழுவில், இந்திய தடகள சம்மேளன தலைவர் அடிலே சுமரிவாலா உள்ளிட்டோரும் அடங்குவர்.

(iii) சம்பந்தப்பட்ட விவகாரம் தொடர்பாக அந்தக் குழு ஆய்வு செய்து, பரிந்துரைகளுடன் கூடிய 170 பக்க அறிக்கையை அமைச்சர் மன்சுக் மாண்டவியாவிடம் வழங்கியுள்ளது.

5. எச்.ஏ.எல் தயாரித்துள்ள அடுத்த தலைமுறை பயணிகள் ஹெலிகாப்டரான 'துருவ் என்.ஜி.- இன் முதல் பயணத்தை மத்திய அமைச்சர் ராம்மோகன் நாயுடு தொடங்கிவைத்தார்.

(i) மத்திய பாதுகாப்புத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் பெங்களூரைச் சேர்ந்த ஹிந்துஸ்தான் ஏரோநாட்டிகல் நிறுவனம் (எச்.ஏ.எல்.) உள்நாட்டு தொழில்நுட்பத்தில் வடிவமைத்து தயாரித்துள்ள 'துருவ் என்.ஜி. ஹெலிகாப்டரின் முதல் பயணத்தை மத்திய விமானத் துறை அமைச்சர் ராம் மோகன் நாயுடு தொடங்கிவைத்தார்.

(ii) பயணிகள் சந்தையின் தேவைகளை நிறைவு செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள துருவ் என்.ஜி. ஹெலிகாப்டர், அதிநவீன தொழில் நுட்பங்களுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. 5.5 டன் எடை கொண்ட இந்த ஹெலிகாப்டரில் இரட்டை என்ஜின்கள் உள்ளன. மாறுபட்ட நில மற்றும் தட்பவெப்ப சூழல்களுக்கு பயன்படுத்திக்கொள்ளும் திறனுடன் தயாரிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக மணிக்கு 285 கி.மீ. வேகத்தில் பயணிக்கக் கூடியது.

(iii) இதன்மூலம், 630 கி.மீ. தொலைவை 3 மணிநேரத்தில் அடைய முடியும். மேலும், 6 ஆயிரம் மீட்டர் உயரம் பறக்கும் திறன்கொண்டது.

(iv) ஒரு நேரத்தில் 14 பேர் பயணிக்கலாம். விமான ஆம்புலன்ஸ் ஆகவும் பயன்படுத்த வசதி செய்யப்பட்டுள்ளது. பேரிடர் காலங்களில் மக்களை மீட்கவும் பயன்படும் என எச்.ஏ.எல். அதிகாரிகள் தெரிவித்தனர்.

6. 4.25 லட்சம் சிறு துப்பாக்கிகள், 48 நீர்மூழ்கி கப்பல் ஏவுகணைகளை கொள்முதல் செய்ய ரூ.4,666 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் பாதுகாப்புத் துறை அமைச்சகம் கையொப்பமிட்டது.

(i) இதுகுறித்து பாதுகாப்புத் துறை அமைச்சகம் வெளியிட்ட செய்திக் குறிப்பில், இந்திய ராணுவத்துக்கு ரூ.2,770 கோடி மதிப்பில் 4.25 லட்சம் சிறு துப்பாக்கிகள் கொள்முதல் செய்ய பாரத் ஃபோர்ஜ் நிறுவனம் மற்றும் பிஎல்ஆர் சிஸ்டம்ஸ்

நிறுவனத்துடன் ஒப்பந்தமிடப்பட்டுள்ளது.

(ii) இந்திய கடற்படைக்கு 48 நீர் மூழ்கி கப்பல் ஏவுகணைகள் மற்றும் ஐஎன்எஸ் கல்வாரி வகை நீர் மூழ்கிக் கப்பல்களை கொள்முதல் செய்ய இத்தாலியில் உள்ள டபுள்யூஏஎஸ்எஸ் நிறுவனத்துடன் ரூ.1,896 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் கையொப்பமிடப்பட்டது.

(iii) இதன்மூலம் தற்போது இந்தியாவில் உள்ள 6 கல்வாரி வகை நீர் மூழ்கிக்கப்பல்களின் போர்த்திறன் மேலும் அதிகரிக்கும். நீர்மூழ்கி கப்பல் ஏவுகணைகள் விநியோகம் 2028-இல் தொடங்கி 2030-இல் நிறைவடையும்' எனத் தெரிவிக்கப்பட்டது.

7. ஹங்கேரி பிரதமர் - விக்டர் ஆர்பன்,

ஸ்லோவாகியா பிரதமர் - ராபர்ட் ஃபிகோ,

செர்பிய அதிபர் - அலெக்சாண்டர் வூசி

8. கடலோரத்தில் கைவிடப்படும் அல்லது இழந்த மீன்பிடி உபகரணங்கள், நெகிழி (பிளாஸ்டிக்) உள்ளிட்ட குப்பைகள், கழிவுகள் குறித்த ஆய்வை தமிழக அரசின் சார்பில் தனியார் நிறுவனம் மேற்கொண்டது.

(i) தமிழக கடற்கரை 1,076 கி.மீ. நீளமானது. இந்தியாவின் கடற்கரையில் இது 15 சதவீதமாகும். மீன் உற்பத்தியில் தமிழகம் நான்காவது இடத்தில் உள்ளது. இதில் 13 மாவட்டங்களில் 52 கடலோர கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டு சராசரியாக ஒவ்வொரு கிராமத்திலும் 20 மீ. என மொத்தம் 1,040 மீ. தொலைவுக்கு இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆய்வில் பல்வேறு அதிர்ச்சிகரமான தகவல்கள் தெரியவந்துள்ளன.

(ii) இந்தப் பகுதிகளில் சராசரியாக ஒரு சதுர மீட்டருக்கு 0.05 கிலோ குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில் அதிகபட்சமாக புதுக்கோட்டை மாவட்டத்தில் ஒரு சதுர மீட்டருக்கு 0.20 கிலோ குப்பைகள் சேகரிக்கப்பட்டுள்ளன. குப்பைகளில் 47.46 சதவீதம் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், மிதவைகளின் கழிவுகள் ஆகும். இதன் அளவு ஆண்டுக்கு 4,554 டன்னாகும். இதே போன்று, இந்தக் குப்பைகளில் நெகிழிக் கழிவுகளின் பங்கு 39.64 சதவீதமாகவும் நெகிழி அல்லாத பொருள்களின் கழிவுகளின் பங்கு 12.9 சதவீதமாகவும் உள்ளன.

(iii) தமிழகத்தில் 31 சதவீத கடற்கரைகள் சுகாதாரமற்றதாகவும், 46 சதவீதம் தீவிர சுகாதாரமற்றதாகவும் 39 சதவீத கடற்கரைகளில் அதிக நெகிழிக் கழிவுகளும், 62 சதவீத கடற்கரைகளில் அபாயகரமான கழிவுகளும் உள்ளது ஆய்வில் தெரியவந்துள்ளது.

(iv) கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள், நெகிழிப் பொருள்கள், குப்பைகள் ஆகியவை கடல்வாழ் உயிரினங்களுக்குப் பெரும் அச்சுறுத்தலாக விளங்குகின்றன. வலைகளில் சிக்கிக் கொள்ளும் விலங்குகள் காயமடைவதுடன், சில உயிரிழக்கவும் நேரிடுகிறது.இதைத் தவிர, நாம் ஒருமுறை பயன்படுத்திவிட்டு தூக்கி எறியும் நெகிழி உறைகள், பாட்டில்கள், உணவுப் பொட்டலங்களின் உறைகள், ஐஸ்கிரீம் டப்பாக்கள், பழச்சாறு (ஜூஸ்) அடைக்கப்பட்ட நெகிழி பாட்டில்கள், காலணிகள், முகக்கவசம், வீட்டு உபயோகப் பொருள்கள் ஆகியவை மழைக் காலத்தில் ஓடைகள், கழிவு நீர்க் கால்வாய்கள் மூலம் கடலுக்குள் சென்று சேருவதால் நீர் மாசுபட்டு கடல்வாழ் உயிரினங்கள் பாதிக்கப்படுகின்றன.

(v) காலப்போக்கில் நெகிழிப் பொருள்கள் நுண்ணிய (மைக்ரோ) பிளாஸ்டிக்காக உடைவதால் அவற்றை உணவு என நினைத்து கடல்வாழ் உயிரினங்கள் உண்கின்றன. இது அந்த உயிரினங்களுக்குத் தீங்கு விளைவிப்பதுடன் கடல் உணவுகளை உண்ணும் மனிதர்களுக்கும் பாதிப்பு ஏற்படுகிறது. சுகாதாரமற்ற கடற்கரைகளால் சுற்றுச்சூழல் மட்டுமல்ல, சுற்றுலாவும் பாதிக்கப்படுகிறது.

(vi) நமது நாட்டில் மட்டுமல்ல, உலக அளவில் எல்லா நாடுகளும் இந்தப் பிரச்னையை எதிர்கொள்கின்றன. 1997- 2009-ஆம் ஆண்டுகளில் அமெரிக்காவின் ஃபுளோரிடாவில் 1,000-த்துக்கும் மேற்பட்ட கடல் ஆமைகள் கைவிடப்பட்டபட்ட மீன்பிடி உபகர ணங்களில் சிக்கிக் கொண்டதாக அமெரிக்க உள்துறைக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வறிக்கை தெரிவிக்கிறது.

(vii) நமது நாட்டில் இந்தப் பாதிப்புகளை எதிர்கொள்ள மத்திய, மாநில அரசுகள் பல்வேறு வகையான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. ஒன்பது கடலோர மாநிலங்கள், புதுச்சேரி, அந்தமான் நிகோபார், லட்சத்தீவுகளில் மத்திய அரசின் கடலோர ஆராய்ச்சிக்கான தேசிய மையம் அவ்வப்போது ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறது. கடற்கரைகளைச் சுத்தப்படுத்தும் பணிகள், பள்ளி - கல்லூரி மாணவர்கள், தொண்டு நிறுவனங்கள் மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள், கருத்தரங்குகள் ஆகியவை நடத்தப்படுகின்றன.

(viii) கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்களை அளிக்கும் மீனவர்களுக்கு கிலோவுக்கு ரூ.38 வீதம் கடந்த ஓராண்டில் மட்டும் ரூ.9.93 லட்சம் ஊக்கத் தொகையை மத்திய அரசு வழங்கியுள்ளது.

(ix) தமிழ்நாடு மீன்வலை முன்னெடுப்புத் திட்டத்தின்கீழ் கடலோர மாவட்டங்களில் கைவிடப்பட்ட வலைகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்களைச் சேகரிக்கும் மையங்களை நிறுவ தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் திட்டமிட்டுள்ளது. இதுபோன்ற முதல் மையம் சென்னை காசிமேட்டில் கடந்த ஆகஸ்ட் 2024-இல் தொடங்கப்பட்டது. இதில் கடந்த ஓராண்டில் 26,101 கிலோ கழிவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது; இவற்றில் 23,270 கிலோ மீன்பிடி

உபகரணங்கள் அங்கீகரிக்கப்பட்ட மறுசுழற்சி நிறுவனங்களுக்கு அனுப்பப்பட்டு மீண்டும் பயன்படுத்தும் வகையில் உருமாற்றம் செய்யப்பட்டுள்ளன.

(x) இந்தப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஏற்கெனவே திட்டமிட்டபடி, 14 கடலோர மாவட்டங்களிலும் கைவிடப்பட்ட மீன்பிடி உபகரணங்கள் சேகரிப்பு மையங்களை உடனடியாகத் தொடங்க வேண்டும். மேலும் மறுசுழற்சி மையங்களும் விரைந்து அமைக்கப்பட வேண்டும். கடலோரத்தில் கைவிடப்படும் வலைகள் உள்ளிட்ட மீன்பிடி உபகரணங்கள், நெகிழிப் பொருள்கள், குப்பைகள் போன்றவற்றை அகற்ற மேற்கொள்ளப்படும் முயற்சிகள் விரைவுபடுத்தப்பட வேண்டும்.

(xi) இவை எல்லாவற்றுக்கும் மேலாக பொது மக்களுக்கும், மீனவர்களுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்தி அவர்களிடம் மாற்றம் ஏற்படச் செய்வதே நிரந்தரத் தீர்வாக அமையும்.